**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

**மதுவரி அறிவித்தல் இல: 10/2018**

## இலங்கைக்குல் இறக்குமதிசெய்யப்படும் குடிபானமல்லாத ஸ்பிரித்துக்கள் மீதான ஒழுங்குவிதிகளைத் திருத்துதல்

திருத்தப்பட்டவாறான மதுவரி கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 2 ஆம், 12 ஆம், 22 ஆம் மற்றும் 25 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் குடிபானமல்லாத ஸ்பிரித்துக்களை இறக்குமதி செய்வதற்கான மதுவரித் தீர்வை தொடர்பில் 2018.02.21 ஆம் திகதிய 2059/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 07/2018 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலினை இற்றைப்படுத்துவதற்கும் மற்றும் அதற்கமைய வசதியேற்பாடுகளை வழங்கும் வகையிலும் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது எனவும் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

மங்கள சமரவீர

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

கொழும்பு - 01

2018 யூன் 13 ஆம் திகதி

### ஒழுங்குவிதிகள்

1. 3 ஆம் பந்தியின் V ஆம் உப பிரிவில் ''குடிபானமல்லாத ஸ்பிரித்து'' என்ற வாசகத்தினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ''மெதைல்.1.ஒல் ($CH_3 - OH$)'' என்ற வாசகத்தினைப் பதிலீடு செய்வதன் மூலமும் மற்றும் அதே பந்தியில் ''அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்'' என்ற வாசகத்தினை நீக்கிவிட்டு ''அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்'' என்ற வாசகத்தினைப் பதிலீடுசெய்வதன் மூலம்,

2. 3 ஆம் பந்தியின் V ஆம் உப பிரிவின் முதலாம் பந்தியினை உடனடுத்து ''இவ்வறிவித்தலின் அட்டவணை 1 இல் குறிப்பிட்ட ஏனைய குடிபானமல்லாத ஸ்பிரித்துக்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட இயல்பு மாற்றி சேர்க்கையைத் தீர்மானிப்பதற்கு ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு'' என்ற புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம்

3. 5 ஆம் பந்தியினை உடனடுத்து கீழே குறிப்பிடப்படும் பந்தியினை 6 ஆம் பந்தி என உட்புகுததுவதன் மூலம்

   ''6. மதுவரிப் பொறுப்பதிகாரி, மதுவரி அத்தியட்சகர், உதவி மதுவரி ஆணையாளர் ஆகியோரின் பரிந்துரையின் பேரில் உரிமம் செல்லுபடியாகும் காலத்திற்கேற்ப உரிமதாரர் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் குடிபானமல்லாத ஸ்பிரித்து அளவின் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட கடிதம் ஒன்று ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படுதல் வேண்டும்.''

4. அட்டவணை II இன் படிவம் I இன் 7 இன் iii ஆம் விடயமாக பின்வரும் வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்,
   ''iii. வருடாந்தம் இறக்குமதிசெய்வதற்காக எதிர்பார்க்கப்படும் குடிபானமல்லாத ஸ்பிரித்தின் அளவு ( அதன் வகைக்கேற்ப வெவ்வேறாக)''

5. அட்டவணை II இன் படிவம் II இன் 6 ii இல் ''(பெயரளவுப் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.)'' எனும் வாக்கியத்தினை உடனடுத்து ''(எவ்வாறாயினும் நடைமுறைப் பிரச்சனைகள்

எழும் பட்டசத்தில் பெயரளவுப் பட்டியலை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவின் பேரில் நீக்கலாம்.)’’ எனும் வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்,

6. அட்டவணை II இன் படிவம் II இன் 7 ஆம் வாசகத்தினை நீக்கிவிட்டு,

“ 7. ஒவ்வொரு விண்ணப்பமும் உரிய மதுவரிப் பொறுப்பதிகாரியின் பரிந்துரையுடன் நேரடியாக மதுவரி ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.’’ என்ற புதிய வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்

7. அட்டவணை III இன் நிரல் I இல் உள்ள 1, 2 இல் “விற்பனை’’ எனும் வாசகத்தினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக “விற்றல்’’ எனும் வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்,

8. அட்டவணை IV இன் படிவம் I இன் 7 ஆம் நிபந்தனைக்கு உடனடுத்து, “கால சூழ்நிலைக்கேற்ப மதுவரி அறிவித்தல் நிபந்தனைகளும் உரிம நிபந்தனைகளும் மீறப்படுமிடத்து மதுவரி கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 56 அல்லது 48 ஆம் பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்’’ என்ற வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்,

9. அட்டவணை IV இன் படிவம் II இன் தலைப்பில் “அதிகாரம்பெற்ற விற்பனையாளர்களுக்காக’’ எனும் வாசகத்தினை நீக்குவதன் மூலம்,

10. அட்டவணை IV இன் படிவம் II இன் 7 ஆம் நிபந்தனைக்கு உடனடுத்து ““கால சூழ்நிலைக்கேற்ப மதுவரி நிபந்தனைகள் மற்றும் உரிம நிபந்தனைகள் மீறப்படுமிடத்து, மதுவரி கட்டளைச் சட்டத்தின்(52 ஆம் அத்தியாயம்) 56 அல்லது 48 ஆம் பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்’’ என்ற வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்,

11. அட்டவணை IV இன் படிவம் III இன் தலைப்பு நீக்கப்பட்டு, “குடிபானமல்லாத ஸ்பிரித்தினை களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தலுக்கான உரிமம்’’ என்ற வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்,

12. அட்டவணை IV இன் படிவம் III இன் 1 ஆம் அட்டவணையில் “(மொத்த/சில்லறை)’’, “திறக்கப்படும் அல்லது மூடப்படும் நேரம்,’’ என்ற வாசகங்கள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக‘(களஞ்சியப்படுத்தல்/சில்லறை விற்பனை)’ எனும் வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்,

13. அட்டவணை IV இன் படிவம் III இன் 6 (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள “குடிபானமல்லாத ஸ்பிரித்தினை மொத்தமாக’’ எனும் வாசகத்திற்குப் பதிலாக “ குடிபானமல்லாத ஸ்பிரித்துக்களை களஞ்சியப்படுத்தல் ’’ எனும் புதிய வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்,

14. அட்டவணை IV இன் படிவம் III இன் 6 ஆம் அட்டவணையில் “உரிமம் வழங்கும் அதிகாரி’’ எனும் வாசகத்திற்குப் பதிலாக “மதுவரி ஆணையாளர் நாயகம்’’ எனும் வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்,

15. அட்டவணை IV இன் படிவம் III இன் நிபந்தனை இல. 1 இல் “மொத்தம்/சில்லறை விற்பனை’’ எனும் வாசகம் நீக்கப்பட்டு “களஞ்சியப்படுத்தல் மற்றும் சில்லறை விற்பனைக்கு’’ எனும் புதிய வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்,

16. அட்டவணை IV இன் படிவம் III இன் நிபந்தனை இல. 3 இல் “குடிபானமல்லாத ஸ்பிரித்து ஒவ்வொரு தொகைக்கும்’’ எனும் வாசகம் நீக்கப்பட்டு “குடிபானமல்லாத ஸ்பிரித்தின் ஒவ்வொரு களஞ்சியப்படுத்துனரும்’’ எனும் வாசகத்தினை அதற்குப் பதிலாக உட்புகுத்துவதன் மூலம்,

17. அட்டவணை IV இன் படிவம் III இன் நிபந்தனை இல. 5 இல் “ கி.கி 4.5’’ எனும் வசகம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக “கி.கி 7.5’’ எனும் வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்,

18. அட்டவணை IV இன் படிவம் III இன் நிபந்தனை இல. 6 இல் ‘‘கி.கி 600’’ எனும் வாசகம் நீக்கப்பட்டு ‘‘கி.கி 1,000’’ எனும் வாசகத்தினை உட்புகுத்துவதன் மூலம்,

19. அட்டவணை IV இன் படிவம் IV இன் 1 ஆம் அட்டவணையில் ‘‘உரிமத்தில்’’ எனும் வாசகத்தினை நீக்குவதன் மூலம்,

20. அட்டவணை VI இன் படிவம் II இல் ‘கொழும்பு’ என்ற வாசகத்தினை அகற்றிவிட்டு ‘ராஜகிரிய’ எனும் வாசகத்தினை பிரதியிடுவதன் மூலமும் மற்றும் ‘‘அதிகாரம் பெற்ற சுங்க உத்தியோகத்தர்’’ எனும் வாசகத்திற்கு உடனடுத்து ‘‘/அதிகாரம் பெற்ற முதலீட்டு சபை உத்தியோத்தர்’’ என உள்ளடக்கி திருத்தியமைப்பதன் மூலம்,